நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

dhinatamil.tn@gmail.com • மாற்றத்தின் ஆரம்பம் • www.dhinatamil.com • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 03.02.2026 . மலர் 04 . இதழ் 033. செவ்வாய்க்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 03.02.2026 . VOL 04 . ISSUE 033. TUESDAY. PAGES 4. Rs.5

**இந்தியையும், சமஸ்கிருதத்தையும் ஒரு சேர திணிக்க முயலும் பா.ஜ.க. அரசுரக்கு சாமரம் வீசும்**

# அடிமை அதிமுக !

## முதல்வர் ஸ்டாலின் கடும் தாக்கு !!

சென்னை, பிப்.03-

“இந்திக்கு இடமில்லை என்று இருமொழிக் கொள்கையை அண்ணா நிலைநாட்டிய மாநிலத்தில், இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் திணிக்கும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாஜக அரசுக்குச் சாமரம் வீசும் அடிமையாக இருக்கிறது அண்ணாவின் பெயரை கட்சியில் வைத்திருக்கும் அதிமுக.

எனவே, இப்போதும் நாம் அண்ணா வழியில் அயராது உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.'' என்று திமுக தொண்டர்களுக்கு அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் தனது கடிதத்தில் கூறியிருப்பதாவது: உங்களில் ஒருவனான என்னுடைய இந்தப் பயணத்திற்கும் ஓயாத உழைப்பிற்கும் உந்து விசையாக இருப்பவர்கள் அண்ணாவும், கலைஞரும், பேராசிரியர் அன்பழகன் உள்ளிட்ட கழகத்தின் முன்னோடிகள்தான்.

அதனால்தான் எதிர்ப்புகளையும் வஞ்சகத்தையும் எதிர்கொள்ளும் போராட்டமாகவே முதலமைச்சர் பொறுப்பை அனுபவித்தபடி, தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு உழைத்து வருகிறேன். உடன்பிறப்புகளான உங்களின் ஆதரவே என்னுடைய வலிமை.

1967-ல் தொடங்கி, 2026-ல் இன்று நடைபெறுகிற திராவிட மாடல் அரசு வரை, அண்ணா வகுத்துத் தந்த திராவிடப் பாதையைப் பின்பற்றியே ஆட்சி நிர்வாகத்தை நடத்தி வருகிறோம்.

நம்மை எதிர்ப்பவர்கள் ஆட்சிக்கு வந்தபோதும், அண்ணாவின் பெயரைத்தான் உச்சரிக்க வேண்டியிருந்தது. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கத்தின் கொள்கைக்கான வெற்றி.

இப்போதும் நாம் அண்ணா வழியில் அயராது உழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்திக்கு இடமில்லை என்று இருமொழிக் கொள்கையை அண்ணா நிலைநாட்டிய மாநிலத்தில், இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் திணிக்கும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாஜக அரசுக்குச் சாமரம் வீசும் அடிமையாக இருக்கிறது அண்ணாவின் பெயரை கட்சியில் வைத்திருக்கும் அதிமுக.

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்ல வேண்டிய மண்ணில், எந்த வகையில் மத வன்முறையைத் தூண்டலாம் என்பதே பாஜகவின் நோக்கமாக உள்ளது. அதற்கு மவுன சாட்சியாக அமைதி காக்கிறது அதிமுக.

மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி என்பதைத் திராவிட மாடல் அரசு தனது ஒவ்வொரு செயல்பாட்டிலும் ஒன்றிய பாஜக அரசுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறது. திராவிட மாடலின் குரல், பாஜக ஆட்சியில் இல்லாத மற்ற மாநிலங்களிலும் ஒலிக்கிறது. மாநில சுயாட்சி என்றாலே பயந்து ஒளிந்து கொள்கிறது, சுயாட்சி எண்ணமோ சுயமரியாதை உணர்வோ இல்லாத அதிமுக.

மக்களிடம் செல் என்று அண்ணா சொன்னது போல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத கொரோனா காலத்திலும் மக்களிடம் சென்றது, ஆட்சியில் மகத்தான திட்டங்களை செயல்படுத்தும் இந்த ஐந்தாண்டுகளிலும் மக்களுடனேயே பயணிக்கிறது.

மக்களுக்காகவே செயல்படுகிற மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை 2026 சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற வைத்து, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்திட வேண்டும் என்ற எண்ணம் தமிழ்நாட்டு மக்களின் மனதில் பதிந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு வஞ்சகம் செய்து வரும், தமிழர்களின் எதிரியான பாஜகவும் அதனுடன் இணைந்துள்ள அதிமுகவும் நமக்கு எதிராகச் செயல்படுவதாக நினைத்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை மீண்டும் படுகுழியில் தள்ள நினைக்கும் சதியை, அண்ணாவின் தம்பிகளான-கலைஞரின் உடன்பிறப்புகளான உங்களால்தான் முறியடித்திட முடியும்.

அந்த உறுதியை ஏற்கும் வகையில், பிப்ரவரி 3 அன்று அண்ணா நினைவு நாளில் அண்ணா சதுக்கம் நோக்கி அமைதிப் பேரணியில் உங்களில் ஒருவனான நானும் கழக முன்னோடிகளும் கழகத் தொண்டர்களும் பங்கேற்கிறோம்.



என்றென்றும் நம் நெஞ்சில் நிறைந்திருக்கும் அண்ணாவின் நினைவு நாளில் தமிழ்நாடெங்கும் அவரது நினைவைப் போற்றும் வகையில் கழகக் கிளைகள் தோறும் அண்ணாவின் படத்திற்கு மாலையிட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தி, கலைஞர் வழங்கிய ஐம்பெரும் முழக்கங்களை உறுதிமொழியாக ஏற்று, தேர்தல் களப்பணிகளுக்கு ஆயத்தமாவோம்.

அண்ணா வழியில் அயராது உழைப்போம். மக்களிடம் செல்வோம். அவர்களின் ஆதரவுடன் சட்டமன்றத் தேர்தலில் உறுதியாக வெல்வோம். இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதல்வரின் கான்வாய்க்காக நிறுத்தப்பட்ட விஜய்யின் கார் !

சென்னை, பிப்.03-

தவெகவின் மூன்றாமாண்டு தொடக்க விழா விஜய் தலைமையில் பனையூரில் நடந்தது. அதே இசிஆர் சாலையை கடந்துதான் முதல்வர் ஸ்டாலினும் மாமல்லபுரத்தில் சுற்றுலா உச்சி மாநாட்டை தொடங்கி வைக்க சென்றிருந்தார். முதல்வரின் கான்வாயும் விஜய்யின் காரும் ஒரே நேரத்தில் நீலாங்கரையை கடக்கும் சூழல் ஏற்பட்டதால், உஷ்ணமான மேலிடம் உளவுத்துறையினரை காய்ச்சி எடுத்திருப்பதாக கிசுகிசுக்கின்றனர்.

தவெகவின் மூன்றாமண்டு நிகழ்வுக்காக காலை 9:55 மணியளவில் விஜய் நீலாங்கரை வீட்டிலிருந்து புறப்பட்டிருந்தார். அதே சமயத்தில்தான் முதல்வரின் கான்வாயும் நீலாங்கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. இதனால் ணிசிஸி சாலையை கனெக்ட் செய்யும் பக்கவாட்டு சாலைகளை காவல்துறையினர் கான்வாய்க்காக ப்ளாக் செய்தனர்.

இதில் நீலாங்கரை வீட்டிலிருந்து இசிஆர் சாலையைப் பிடித்து பனையூரை எட்டவிருந்த விஜய்யின் காரும் மற்ற சில வாகனங்களோடு சேர்த்து தடுத்து நிறுத்தப்பட்டது. 2-3 நிமிடங்களில் முதல்வரின் கான்வாய் நீலாங்கரையை கடக்கவே போக்குவரத்து விடுவிக்கப்பட்டிருக்கிறது.

விஜய் வீட்டிலிருந்து கிளம்பி அலுவலகம் வருவதை பாலோ செய்ய சாட்டிலைட் சேனல்கள் கேமராமேன்களுடன் சில யூனிட்டுகளை நியமித்திருந்தனர். அவர்கள் விஜய்யின் கார் சி.எம் இன் கான்வாய்க்காக தடுத்து நிறுத்தப்பட்டதாக தகவல் சொல்லவே, முதல்வருக்காக விஜய்யின் தடுத்து நிறுத்தம் என லைவ்விலேயே செய்தியாக்கி விட்டன சேனல்கள்.

ஸ்பாட்டிலிருந்த உளவுத்துறையினர் அப்போதே நம்முடைய தலையைத்தான் மேலிடம் உருட்டப்போகிறதென கடுப்பாகினர். எதிர்பார்த்ததை போலவே தவெக அலுவலகத்தில் நோட் எடுத்துக் கொண்டிருந்த உளவுத்துறையினருக்கு மேலிடத்திலிருந்து அழைப்பு வந்தது.

'இவ்வளவு அஜாக்கிரதையாகவாக இருப்பீர்கள். முதல்வரின் நிகழ்ச்சி இருக்கிறதென்று தெரியுமல்லவா? விஜய் தரப்பிடம் தகவலைச் சொல்லி அவரை முதல்வரின் வருகைக்கு முன்போ பின்போ வரச் சொல்லியிருக்க வேண்டியதுதானே? இதெல்லாம் வழக்கமான நடைமுறைதானே. இதில் கூடவா கோட்டை விடுவீர்கள்' என ரெய்டு விட்டிருக்கின்றனர்.

'நிகழ்ச்சி 11 மணிக்குதான் என தவெக தரப்பு அறிவித்திருந்தது. அதனால் இயல்பாகவே விஜய் 10:40 க்கு மேல்தான் நீலாங்கரை வீட்டிலிருந்து கிளம்புவார் என அனுமானித்திருந்தோம். ஆனால், திடீரென உடனிருந்தவர்கள் ஏதோ ஜோசிய காரணங்களை அடுக்க சீக்கிரமே கிளம்பியிருக்கிறார் விஜய். மேலும், வேறு எதுவும் பெரிதாக இல்லாததால் செய்தியாளர்கள்தான் இந்த விவகாரத்தை ஊதி பெரிதாக்கி லைவ்விலேயே அடித்துவிட்டார்கள்' என மேலிடத்திடம் கூறி ஒருவழியாக சமாளித்ததாக ஸ்பாட்டிலிருந்த உளவுத்துறையினர் பெருமூச்சு விட்டனர்.

சி.எம் கான்வாய்க்காக விஜய்யின் வாகனம் நிறுத்தப்பட்டதென பரவிய செய்தியில்தான் முதல்வர் தரப்பு கடுப்பானதாகவும் அதனால்தான் ஸ்பாட்டிலிருந்த உளவுத்துறையை பிடித்து அதிகாரிகள் வாங்கு வாங்கென வாங்கியதாகவும் கூறுகின்றனர் காவல்துறை வட்டாரத்தினர்.

## தே. மு. தி. க சார்பில் கொட்டாரம் சந்திப்பில் உள்ளம் தேடி இல்லம் நாடி நிகழ்ச்சி - பிரேமலதா விஜயகாந்த் பங்கேற்பு



தென்தாமரை குளம்,பிப்.3-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் மக்கள்தலைவர் கேப்டன் ரதயாத்திரை மற்றும் "உள்ளம் தேடி இல்லம் நாடி"நிகழ்ச்சி கொட்டாரம் சந்திப்பில் நடைபெற்றது. இதில் தேமுதிக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.கொட்டாரம் சித்தி விநாயகர் கோவிலில் சிறப்பு பூஜைகள் நடத்தி,கேப்டன் ரத ஊர்வலம் தேமுதிக கிழக்கு மாவட்ட செயலாளர் அமுதன் தலைமையில், தேமுதிக சமூக வலைதள அணி துணைச் செயலாளரும், திருநெல்வேலி புறநகர் மாவட்ட தேர்தல் பொறுப்பாளருமான வக்கீல் சிவக்குமார் நாகப்பன் முன்னிலையில் ஊர்வலமாக கொட்டாரம் சந்திப்பில் வந்தடைந்தது. அதனைத் தொடர்ந்து தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பொதுமக்களை சந்தித்து சிறப்புரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

கோட்டை முதல் குமரி வரை வந்து ரத யாத்திரை நிறைவு பெற்றுள்ளது. நமது கட்சிக்கு எல்லாம் நல்லதா நடக்கும். படித்தவர்கள் அதிகமாக இருக்கும் மாவட்டம் கன்னியாகுமரி. கன்னியாகுமரியில் தான் குமரி கண்டம் இருந்தது. தமிழ் மொழி பிறந்தது குமரி கண்டம் தான். ஆண்ட கட்சிக்கும் ஆளுகின்ற கட்சிக்கும் சிம்ம சொப்பனமாக தேமுதிக இருக்கிறது.2026 தேர்தலில் தேமுதிக கூட்டணி மகத்தான வெற்றி பெறும்.அப்போது

கன்னியாகுமரி சுற்றுலா தலம் மேம்படுத்தப்படும். தோவாளை மலர் சந்தையில் சென்ட் தொழிற்சாலை அமைக்கப்படும். மீனவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் மீனவர்கள் காக்கப்படுவார்கள்.

கன்னியாகுமரி அரசு மருத்துவமனையில் மருத்துவர், செவிலியரே இல்லை.கனிம வள கொள்ளை அதிகமாக உள்ளது. கனிம வள கொள்ளை தடுக்கப்படும். மயிலாடியில் கல் சிற்ப பூங்கா அமைக்கப்படும்.

சுசீந்திரத்தில் தடுப்பணை கட்டப்படும். தேமுதிக இடம்பெறும் கூட்டணிதான் தமிழ்நாட்டில் ஆட்சியமைக்கும் என்றும் கூறினார். இதில் தேமுதிக நிர்வாகிகள்,தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

## திரிபுரா பவுண்டேஷன் அறக்கட்டளையின் நிறுவனர் பாபா பாஸ்கரன் பிள்ளை 77வது பிறந்த நாள் விழா



இராமேஸ்வரம்.பிப்.03-

ராமேஸ்வரம் திரிபுரா பவுண்டேஷன் அறக்கட்டளையின் நிறுவனர் பாபா பாஸ்கரன் பிள்ளை 77வது பிறந்த நாளை முன்னிட்டு கெந்தமாதன பர்வதம் சாலையில் அமைந்துள்ள குலதெய்வமான ராக்கச்சி அம்மன் கோவிலில் சிறப்பு பூஜையில் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் மொரிசியஸ் ஆஸ்திரேலியா உள்ளிட்ட வெளிநாட்டு பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதில் 77 வது பிறந்த நாளை முன்னிட்டு பாஸ்கரன் பிள்ளை அவர்களது சிஷ்யர்களான பல்வேறு நாடுகளை சேர்ந்த வெளிநாட்டில் வாழும் பக்தர்கள் ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடலில் நீராடியும் கோவிலில் உள்ள 22 புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பின்பு ராமநாதசுவாமி பர்வதவர்த்தினி அம்பாளை சாமி தரிசனம் செய்து வந்தனர். அமெரிக்காவின் இந்து மதம் பற்றிய ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றதுடன், புற்றுநோய் குறித்து ஆய்வு செய்து அதற்கான மருந்து கண்டு பிடித்து புகழ்பெற்றவர் பாபா பாஸ்கரன் பிள்ளை.

கடந்த 35 ஆண்டுகளாக திரிபுரா பவுண்டேஷன் என்ற இந்து மத ஆராய்ச்சி அமைப்பின் மூலம் ஆன்மீக கருத்துக்களை பரப்பி வருவதுடன் அனைவரிடமும் ஆன்மீக கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட பல்வேறு நாடுகளின் பக்தர்கள் இந்து மத ஆராய்ச்சியில் ஈடுபட்டு இந்து மதத்தை தழுவினர்.

தங்களுக்கு ஆன்மீக அனுபவங்களை அளித்த பாபா பாஸ்கரன் பிள்ளைக்கு நன்றி கூறும் வகையில் அவரது பிறந்த நாளை முன்னிட்டு அனைத்து பக்தர்களும் ஆன்மீக விழாவாக கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் பாபா பாஸ்கரன் பிள்ளையின் 77வது பிறந்த நாளை முன்னிட்டு ராமேஸ்வரம் கந்தமாதன பர்வதம் அருகில் உள்ள அவரது குலதெய்வமான ராக்ச்சி அம்மன் கோவிலில் பாபா பாஸ்கரன் பிள்ளையின் 77வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இதில் வேத விற்பனர்களை கொண்டு ஆயுஷ்ஹோமம், மிருத்தஞ்யஹோமம், உள்ளிட்ட யாகவேள்விகள் நடத்தப்பட்டதுடன் ராக்கச்சி அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டது.

விழாவில் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் மொரிசியஸ், ஆஸ்திரேலியா உள்ளிட்ட வெளிநாட்டு பக்தர்கள் 50 பேர் கலந்து கொண்டனர்.

கருப்புசாமி சன்னதியில் சிறப்பு பூஜைகள் நடக்கப்பட்டு பூசாரி சுகுமார் அண்ணன் மற்றும் கருப்புசாமி அருளை வெளிநாட்டு பக்தர்களுக்கு வரவழைத்து இறை உணர்வை உணர வைத்தார். இதில் அப்பகுதியை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை திரிபுரா பவுண்டேஷன் நிர்வாகி வேடராஜன் செய்திருந்தார்.

## சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமை பதியில் இஸ்ரோ தலைவர் நாராயணன் சாமி தரிசனம்



தென்தமரைகுளம்., பிப்.03.

கன்னியாகுமரிமாவட்டம் சாமிதோப்பில் உள்ள அய்யா வைகுண்டசாமி தலைமைபதிக்கு நேற்று காலை இஸ்ரோ தலைவர் நாராயணன் சாமிதரிசனம் செய்ய வருகை தந்தார்.முன்னதாக தலைமை பதிக்கு வரும் வழியில் அன்பு வனத்திற்கு சென்ற அவர் பால.பிரஜாபதி அடிகளாரை சந்தித்து ஆசி பெற்றார்.பின்பு முத்திரி கிணற்றில் பதம் விட்டு தலைமை பதிக்கு வந்த இஸ்ரோ தலைவர் நாராயணனை தலைமை பதி நிர்வாகிகள் பால ஜனாதிபதி, பையன் காமராஜ், பால் பையன்,பையன், அன்பு வனம் நிர்வாகி பேராசிரியர் ஆர்.தர்ம ரஜினி ஆகியோர் வரவேற்றனர். . தொடர்ந்து இஸ்ரோ தலைவர் வடக்கு வாசல், பள்ளியறை சென்று அய்யா வழிமுறைப்படி தலையில் தலப்பாகை அணிந்து சாமி தரிசனம் செய்தார். அவருக்கு நெற்றியில் நாமம் இட்டு தலைமை பதி சார்பில் இனிமம் வழங்கப்பட்டது.

## இரணியல் அருகே ஆட்டோ மோதி வாலிபர் உயிரிழப்பு

இரணியல், பிப்.3

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தருவை அருகே உள்ள ஓமநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர் ஆண்ட்றோ (32). இவருக்கு திருமணம் ஆகி செல்வி என்ற மனைவியும் இரண்டு குழந்தைகளும் உள்ளனர். இவர் இரணியல் அருகே உள்ள ஒரு கட்டிட காண்ட்ராக்டரிடம் ஜேசிபி ஓட்டுனர் ஆக நான்கு ஆண்டுகளாக பணி புரிந்து வருகிறார். நுள்ளி விளை பகுதியில் தங்கி இருந்த ஆண்றோ நேற்று காலை திங்கள் நகரில் இறைச்சி வாங்கி விட்டு இரணியல் அருகே உள்ள ஆமத்தான் பொத்தை அருகே உள்ள ஒரு ஆபத்தான வளைவில் வந்து கொண்டு இருந்த போது எதிர்பாராத விதமாக எதிராக வந்த ஆட்டோ மோட்டார் சைக்கிள் மீது மோதி தலையில் பலத்த காயமடைந்து ஆசாரி பள்ளம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி நேற்று இரவு பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து புகாரில் பேரில் இரணியல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சேவியர் பிராங்ளின் ஆட்டோவை ஓட்டி வந்த தலக்குளம் மேலத்தெரு பகுதியில் சேர்ந்த நாராயணன் (30) மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# இந்தியாவின் பெண் கிரிக்கெட் வீராங்கனைகளை உருவாக்க கைகோர்க்கும் ஹிமாலயா வெல்னஸ் மற்றும் ஆர்.சி.பி மகளிர் அணி




சென்னை, பிப்.03-

உங்களுக்குப் பிடித்த கிரிக்கெட் வீராங்கனை, உங்கள் கைபேசி வழியாகவே உங்களுக்கு வழிகாட்டி, உத்வேகம் அளித்து, உங்கள் விளையாட்டுப் பயணத்தை வடிவமைக்க உதவினால் எப்படியிருக்கும்? இந்தியாவின் முன்னணி ஃபேஸ் வாஷ் பிராண்டான ஹிமாலயா வெல்னஸ், தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு ஒண்டர் வுமன்' அகாடமியை அறிமுகப்படுத்தியுள்ளது. இளம் பெண்கள் சவால்களை கடந்து, தாங்கள் விரும்பும் துறையில் முதலிடம் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்ட "ஒன்"டர் வுமன் முயற்சியின் அடுத்த கட்டமாக இது அமைந்துள்ளது.

வெறும் விழிப்புணர்வோடு நின்றுவிடாமல், உண்மையான வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் "ஒன்"டர் வுமன் அகாடமி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதிலும் உள்ள இளம் பெண் கிரிக்கெட் ஆர்வலர்களுக்கு 100 கல்வி உதவித்தொகைகளை (Scholarships) வழங்க ஹிமாலயா வெல்னஸ் முன்வந்துள்ளது. இந்த அகாடமி மூலம் ஆர்.சி.பி மகளிர் அணியினரின் பிரத்யேக ஆலோசனைகள், கிரிக்கெட் நுணுக்கங்கள் மற்றும் தன்னம்பிக்கை தரும் வழிகாட்டல்களைப் பெறலாம்.

# மங்களக்குடியில் தமுமுகவின் சமூக நீதி மாணவர் இயக்கம் ஆலோசனை கூட்டம்



ராமநாதபுரம், பிப்.3-


ராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் மங்களக்குடியில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் மாணவர் பிரிவான சமூகநீதி மாணவர் இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டம் மங்களக்குடி கிளை தலைவர் ஜாகிர் ஹுசைன் தலைமையில் நடைபெற்றது. வருகின்ற 08.02.2026 அன்று சென்னையில் சமூக நீதி மாணவர் அமைப்பின் வெள்ளி விழா மாநாடு சென்னையில் நடைபெறுவதையொட்டி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தமுமுக மாநில செயலாளர் தொண்டி சாதிக் பாட்சா, மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஜிஃப்ரி, தமுமுக மாவட்ட துணை செயலாளர் யான்பு இபுராஹிம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு மாணவர்களிடையே கலந்துரையாடல் நடத்தினர். நிகழ்வை மங்களக்குடி கிளை தமுமுக செயலாளர் சேக் கலிபா பொருளாளர் பைசல் ரஹ்மான் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். நிகழ்வில் மங்களக்குடி ஜாபர், துல்பக்கர், அப்துல்லா மற்றும் நிர்வாகிகள் மாணவர்கள் 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மங்களக்குடி யிலிருந்து மாணவர்கள் மாநாட்டிற்கு அதிகமான மாணவர்கள் அழைத்து செல்வது எனவும் மங்களக்குடி பள்ளிவாசல் அருகே மழலையர் பள்ளி அருகிலும் மற்றும் மங்களக்குடி நான்கு முக்கு சாலையில் உள்ள உயர் கோபுர மின் விளக்கு பழுதடைந்து பல வருடங்கள் ஆகியும் பலமுறை புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் இல்லை இதனால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது.

மக்கள் நலன் கருதி உடனடியாக சரி செய்து கொடுக்க வேண்டும் என அரசை வலியுறுத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி கயத்தார் மேற்கு ஒன்றியம் உள் உள்பட்ட கழுகுமலையில் உள்ள ஒன்றிய அலுவலகத்தில் வைத்து கயத்தார் மேற்கு ஒன்றிய செயலாளரும் பேரூராட்சி மன்ற துணைத் தலைவருமான ஆ.சுப்பிரமணியன் தலைமையில் கே.வெங்கடேஸ்வரபுரம் ஊரைச் சேர்ந்த மாற்று கட்சி சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் திமுகவில் இணைந்தனர்.

# ஆதரவற்ற முதியோர்களுக்கு முதியோர் காப்பகத்தினை திமுக எம்எல்ஏ தே.மதியழகன் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார்



கிருஷ்ணகிரி, பிப். 3-

கிருஷ்ணகிரி புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, மூன்றாவது கிராஸில், அஸ்டலட்சுமி தொண்டு நிறுவனத்தின் சார்பில் ஆதரவற்ற முதியோர் இல்லம் திறப்பு விழா நடைபெற்றது. அஸ்டலட்சுமி தொண்டு நிறுவனத்தின் சார்பில் வயதான காலத்தில் கவனிக்கப்படாமல் அவதிப்படும் முதியோர்கள், யாரும் இல்லாமல் வயதானக்காலத்தில் அவதிப்படும் முதியோர்கள் மற்றும் பெற்றக் குழந்தைகளால் கைவிடப்பட்ட முதியோர்களுக்கு வாழ்வு கொடுத்து அவர்களை அரவணைத்து கடைசி காலம் வரை சந்தோஷமாக வாழவைக்கும் வகையில் புதியதாக இதை துவங்கப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனத்தின் இயக்குனரான திருமதி.புஸ்பாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆதரவற்ற முதியோர் தொண்டு நிறுவனத்தை பர்கூர் திமுக சட்ட உறுப்பினரும், கிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான தே.மதியழகன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டு ஆதரவற்ற முதியோர் இல்லத்தினை, ரிப்பன்வெட்டியும், குத்துவிளக்கு ஏற்றியும், துவக்கி வைத்து சிறப்பாக செயல்படுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அப்போது பொதுக்குழு உறுப்பினர் அஞ்சூர் நாகராஜ், மத்திய ஒன்றிய நிர்வாகி சரவணன், நகர செயலாளர் அஸ்லாம் ரகுமான் ஷெரிப், மற்றும் திமுக கட்சியை சேர்ந்த சீனிவாசன், கோவிந்தராஜ், புதிய வீட்டு வசதி வாரிய மணிகண்டன், சத்திவேல், மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகளும் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp-ல் பின் தொடர

# லாடனேந்தல் ஸ்ரீ பூங்காவன முத்துமாரியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழா



திருப்புவனம் பிப். 03-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள லாடனேந்தல் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ பூங்காவன முத்துமாரியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்,

திருப்புவனம் அருகே லாடனேந்தல் கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ பூங்காவன முத்துமாரியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் நடத்த உத்தேசிக்கப்பட்டு திருப்பணி வேலைகள் நடந்து முடிவடைந்ததை தொடர்ந்து விநாயகர் பூஜையுடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது. நான்காம் கால யாகசாலை பூஜைகள் காலை தொடங்கியது. சிவாச்சார்யார்கள் புனித நீர் அடங்கிய கலசங்களை சுமந்து யாகசாலையை வலம் வந்து.கோவில் விமானத்திற்கு புனித நீர் ஊற்றிய போது 30-க்கும் மேற்பட்ட கருடர்கள் கோவிலுக்கு மேலே வட்டமிட்டதை கண்டு பக்தர்கள் மனம் உருகி சாமி தரிசனம் செய்தனர் அதன் பின்னர் கலசங்களுக்கு புனித நீரானது ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது அதன் தொடர்ச்சியாக ஸ்ரீ பூங்காவன முத்துமாரியம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர் சாமி தரிசனம் செய்தனர். வருகை புரிந்த பக்தர்கள் அனைவருக்கும் கோயில் நிர்வாகம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

# மத்திய அரசின் பட்ஜெட்டினால் விலைவாசி உயர்வு மேலும் அதிகரிக்கும் காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு கண்டனம்



ஈரோடு, பிப். 3-

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு துணை தலைவர் கே என் பாட்சா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

மத்திய அரசின் பட்ஜெட் மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. பொருளாதார வீழ்ச்சிக்கு எந்த வித நடவடிக்கையும் பட்ஜெட்டில் கூறப்படவில்லை. இதனால் விலைவாசி உயர்வு மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தமிழகத்தில் உள்ள நதிகளை இணைப்பது தொடர்பாக பட்ஜெட்டில் எதுவும் கூறப்படவில்லை. மொத்தத்தில் மக்கள் விரோத பட்ஜெட்டாக இது உள்ளது. வழக்கம் போல தமிழக நலனுக்கு எதுவும் கூறப்படவில்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரூரில் வேளாண் கண்காட்சி



அரூர், பிப்.03–

அரூர் உழவர் சந்தை வளாகத்தில், பாலாறு வேளாண் கல்லூரி மாணவர்கள் சார்பில் சிறப்பு வேளாண் கண்காட்சி மற்றும் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

அரூர் வேளாண்மை உதவி இயக்குநர் இளங்கோவன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். பாலாறு வேளாண் கல்லூரி முதல்வர் டாக்டர் தமிழ்ச்செல்வன், பாட ஆசிரியர் டாக்டர் வெண்ணிலா மேரி மற்றும் ஒருங்கிணைப்பாளர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உழவர் சந்தைக்கு வருகை தந்த 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

மாணவர்கள் தங்களின் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி உருவாக்கிய பல்வேறு வேளாண் மாதிரிகள் மற்றும் விளக்கப் படங்களைக் காட்சிப்படுத்தினர். இதில் இயற்கை விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நவீன சாகுபடி முறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டிருந்தது.

கண்காட்சிக்கு வந்தவர்களுக்கு ஆரோக்கியம் தரும் முடவாட்டுக்கால் சூப், முருங்கை சூப் மற்றும் எள்ளு உருண்டை ஆகிய பாரம்பரிய உணவுகள் வழங்கப்பட்டன. இயற்கை உணவுகளின் மருத்துவக் குணங்கள் குறித்து மாணவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நிகழ்வின் நினைவாக, உதவி இயக்குநர் திரு. இளங்கோவன் அவர்கள் உழவர் சந்தை வளாகத்தில் நொச்சி மரக்கன்றினை நட்டு வைத்தார். மேலும், கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் வேம்பு மற்றும் நொச்சி மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. இயற்கை வேலி அமைப்பதற்கும், பூச்சி விரட்டியாகவும் இந்த மரக்கன்றுகள் பயன்படும் என மாணவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

மாணவர்களின் இந்தச் சமூக அக்கறை கொண்ட முயற்சியை உழவர் சந்தைக்கு வந்திருந்த விவசாயிகள் நெகிழ்ச்சியுடன் பாராட்டிச் சென்றனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !



கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் ஊராட்சி ஒன்றியம், அந்தேரிப்பட்டி ஊராட்சி, சுண்ணாம்பட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக, அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையில் எடப்பாடி பழனிச்சாமிக்கு திமுக அமைப்புச் செயலாளர் ஆர் எஸ் பாரதி பதிலடி !




ஊத்தங்கரை பிப் 03-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் தமிழ்நாடு தலை குனியாது பரப்புரை மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திமுகவின் ஐந்தாண்டு ஆட்சிக்கால சாதனைகளை எடுத்துரைத்தனர்.

மேலும் பல மேடைகளில் எடப்பாடி பழனிச்சாமி திமுக ஊழல் ஆட்சி எனக் கூறியதற்கு ஆர் எஸ் பாரதி பதிலளித்துள்ளார்.

அதிமுக ஆட்சிக்காலத்தில் ஆட்சியில் இருந்தபோது ஜெயலலிதா அம்மையார் ஊழல் செய்து பெங்களூரு சிறையில் அடைக்கப்பட்டார். அந்த வழக்கை போட்டது நான் தான்.

எடப்பாடி இரட்டைக் கொலை வழக்கில் கைது செய்தது எடப்பாடி பழனிச்சாமி மறந்துவிட்டார். அவருக்கு எதிரான சாட்சியை கலைத்த செங்குட்டுவனை கட்சி அடிப்படை உறுப்பினர் இருந்தே நீக்கியவர். அவர் வரலாறு தெரியாமல் பேசுகிறார்.

அவரது ஆட்சி காலத்தில் கொட நாட்டு கொள்ளை, ஜெயலலிதாவின் வீட்டிலேயே காப்பாற்ற முடியாமல் இருந்த எடப்பாடி பழனிச்சாமி தற்போது தமிழ்நாட்டை காப்பாற்றப் போகிறாரா?.

எம்ஜிஆர் அதிக செயற்குழு பொதுக்குழு கூட்டம் கூட்டியதில்லை, ஆனால் பழனிச்சாமி அதிகளவு செயற்குழு பொதுக்குழு கூட்டம் கூட்டுகிறார். அதற்குக் காரணம் கட்சியிலிருந்து யார் யார் விலகினார்கள், யார் யார் இறந்தார்கள், யாரெல்லாம் இரு மனதில் இருக்கிறார்கள் என்பதை அறிவதற்காகவே இக்கூட்டம் நடத்தப்படுவதாக கூறினார்.

கருணாநிதி மற்றும் மு க ஸ்டாலின் ஆக இருவருமே பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பவர்கள். பெண்கள் எப்பொழுதுமே நன்றி மறக்காதவர்கள். அதனால்தான் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கியது திமுகஆட்சி தான்.

திமுக எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது ஒரு குடும்பத்திற்கு 5000 ரூபாய் வழங்கச் சொல்லி கேட்டதற்கு, எடப்பாடி ஆயிரம் ரூபாய் வழங்கினார். ஆனால் திமுக ஆட்சி பொறுப்பேற்றவுடன் ஐயாயிரம் ரூபாயும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கினார்.

# ஆறுகாணி அருகே பாஜகவினர் கண்டன ஆர்ப்பாட்டம் !




விளவங்கோடு, பிப்ரவரி. 03 -

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டம் கடையல் பேரூராட்சிக்குட்பட்ட பழங்குடி, காணியின மக்களை கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகமும், மாவட்ட வனத்துறை மற்றும் கடையல் பேரூராட்சி நிர்வாகமும் புறக்கணித்து வருவதாக கூறி அதனைக் கண்டித்து பாஜக வினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மேல்புறம் வடக்கு ஒன்றியத் தலைவர் ஹரிஷ் குமார் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் மற்றும் பழங்குடி மக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் வழங்கினார்



திருவள்ளூர், பிப்.03-

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் பொதுமக்களிடம் 387 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு தீர்வுக்கான சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உத்திரவிட்டார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் பொதுமக்களிடம் இருந்து 387 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு உரிய

தீர்வுக்கான சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உத்திரவிட்டார். இம்மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள், தங்களது குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் பொது பிரச்சனைகள் தொடர்பாக உதவிகள் வேண்டியும் 387 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் வழங்கினர். இதில், நிலம் சம்பந்தமாக 78 மனுக்களும் சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 45 மனுக்களும் வேலைவாய்ப்பு வேண்டி 22 மனுக்களும் பசுமைவீடு, அடிப்படை வசதிகள் வேண்டி32 மனுக்களும் மற்றும் இதர துறைகள் சார்பாக 210 மனுக்கள் என ஆக மொத்தம் 387 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை

வழங்கிட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப்,அறிவுறுத்தினார்.


இதனைத்தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 12 பல்வேறு குறைபாடுகள் உடைய மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.12000/- வீதம் ஆக மொத்தம் ரூ1.44 இலட்சம் மதிப்பீட்டில் இயற்கை உபாதை கழிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பாலமுருகன், உதவி ஆணையர் (கலால்) திரு.கணேசன், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.செ.சண்முகபிரீத்தா, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.வெங்கடேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உஷா ராணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# தொண்டி அரசு மேற்கு பள்ளிக்கு தமிழ்நாடு அரசு மாநில எழுத்தறிவு விருது

## தமுமுக சார்பில் நிர்வாகிகள் வாழ்த்து



ராமநாதபுரம், பிப்.3-

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி மேற்கு பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் சாந்தி முருகானந்தம் மற்றும் பள்ளி கல்வித்துறை பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் மாநில எழுத்தறிவு விருது 2023-24 தொண்டி மேற்கு பள்ளி மையத்திற்கு 2023-24 ஆண்டில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழ் நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதை மையத்திற்கு அளித்த தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்திற்கும் விருது மையத்திற்கு கிடைக்க உறுதுணையாக இருந்த கல்வி அதிகாரிகளுக்கும், அந்த ஆண்டில் சிறப்பாக பணியாற்றிய தலைமைஆசிரியர் நல்லாசிரியர் சாந்தி முருகானந்தம் பயிற்சி கொடுத்த தன்னார்வலர்கள் பிருந்தா, சாஜிதா ஆகியோருக்கு வாழ்த்துக்கள் கூறப்பட்டது.

இவர்களுக்கு மற்றும் மையத்தில் இணைந்து கற்றுப் பயனடைந்த அனைவருக்கும் தமிழ்நாடு முஸ்லிம் மகளிர் பேரவை நிர்வாகிகள் சரிபா, பானு, நாச்சியா, ஜென்னத், பவுசியா தமுமுக மாநிலச் செயலாளர் தொண்டி சாதிக் பாட்ஷா, மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஜி ஃப்ரீ, கவுன்சிலர் பெரிய சாமி, நகர் தலைவர் காதர் அலாவுதீன் மைதீன் பரக்கதலி ஜாபிர் ஆகியோர் நல்லாசிரியர் உள்ளிட்டோர் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துகொண்டனர்.

# விளாத்திகுளம் அருகே இரவிலும் வீதி வீதியாக விவசாய பெருங்குடி மக்கள் கால்நடை வளப்போரிடம் வாக்கு சேகரித்த அதிமுகவினர்!



விளாத்திகுளம், பிப்ரவரி.03-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே மந்திகுளம் கிராமத்தில் இரவிலும் வீதி வீதியாக விவசாய பெருங்குடி மக்கள் கால்நடை வளப்போரிடம் வீடு வீடாக சென்று விளாத்திகுளம் அதிமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன் ஏற்பாட்டில் வருகின்ற சட்டமன்ற பொது தேர்தல் 2026 அதிமுக அதிமுக கழக செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்த தேர்தல் அறிக்கை குறித்தான துண்டுப் பிரசுரங்களை, விளாத்திகுளம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பன் தலைமையில் அதிமுகவினர் மற்றும் இந்திய ஜனநாயக கூட்டணி கட்சியினர், வழங்கி வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் இந்திய ஜனநாயக கட்சியில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் மகேஷ்,பால்ராஜ், நகரசெயலாளர் மாரிமுத்து,அதிமுக வடக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் வரதராஜபெருமாள்,குட்லக் செல்வராஜ், வடக்கு மாவட்ட மகளிர் அணி இணை செயலாளர் பிரியா, வேல்முருகன், ஆசைத்தம்பி, மரகதவேல், தங்கராஜ், சிறுதொண்டன் ,தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆனந்த், மருதுபாண்டி, மகளிர் அணி சாந்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!**

## பொது அறிவிப்பு

வருவாய் கோட்ட அலுவலகம், பட்டுக்கோட்டை.
ந.க.5969/2025/அ 5 நாள்: 30.01.2026
தம்புசாமி த/பெ.வேலாயுதம் மேலசெம்பாளூர் கிராமம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

எதிர்

மனுதாரர்

இல்லை

–எதிர் மனுதாரர்

அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், மேற்படி முகவரியில் வசிக்கும் தம்புசாமி ஆகிய நான் கொடுக்கும் | அறிவிப்பு என்ன வென்றால், எனது மகன் வீரவேல் த/பெ.தம்புசாமி என்பவர் கடந்த 06-07-2007 ஆண்டு தேதியன்று மேற்படி முகவரியில் பிறந்துள்ளார். அவரது பிறப்பை எனது அறியாமையினாலும், கவனக் குறைவினாலும் பதிவு செய்ய தவறி விட்டேன். எனவே தற்போது காலதாமதக் கட்டணத்துடன் பதிவு செய்ய உத்தரவிட வேண்டுமாய் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு செய்திருந்தேன். அம்மனு விசாரணையில் உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை எதுவும் இருப்பின் இவ்வறிவிப்பு பிரதி வெளியான நாள் முதல் 15 நாட்களுக்குள் கனம் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மனு அனுமதிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்
தம்புசாமி




# தேசிய சீனியர் பெண்கள் கபடி போட்டியில் வெண்கல பதக்கம் பெற்ற தன்யலாவிற்கு மரியாதை செலுத்தி வரவேற்பு!



சுசீந்திரம், பெப்.3-

கன்னியாகுமரி மாவட்டம் திருநைனார் குறிச்சி கபடி அணியின் நட்சத்திர வீராங்கனை தன்யா தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் கடந்த ஜன 27ம் தேதியில் நடந்த தேசிய சீனியர் பெண்கள் கபடி போட்டியில் வெண்கல பதக்கத்துடன், பரிசு தொகையும் சான்றிதழும் பெற்றார். இன்று காலை ரயில் மூலம் நாகர்கோவில் வந்தடைந்த அவரை குமரி மாவட்டம் முன்னாள் அறங்காவலர் குழு தலைவரும், திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் பிரபா ஜி ராமகிருஷ்ணன் அவர்கள் சாலவே அணிவித்து வரவேற்றார். உடன் கன்னியாகுமரி மாவட்ட கபடி கழக செயலாளர் சுபாஷ், நாகர்கோவில் தெற்கு பகுதி செயலாளர் ஜீவா, மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராமதாஸ், துணைத் தலைவர் மால்டன் ஜினின் உள்ளிட்டோர் வரவேற்று வாழ்த்து தெரிவித்தனர்

# கோவையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூக நீதிக்கான கூட்டமைப்பின் தலைவர் ரத்ன சபாபதி குற்றச்சாட்டு!



கோவை பிப் 03-

இதர பிற்படுத்தப்பட்ட சமூக உரிமைக்கான அமைப்பு தலைவர் ரத்ன சபாபதி,கோவை பந்தயசாலையில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அப்பொழுது அவர் கூறியதாவது."உண்மையான சமூக நீதியை பற்றி தமிழக அரசியல் கட்சிகள் கவலைப்படவில்லை"என்று கடுமையாக குற்றம்சாட்டினார்.

குறிப்பாக ஒபிசி,எஸ்இ,எஸ்டி,மாணவர்களை உயர்கல்வி நிலையங்களில் மனஅழுத்தம்,கேலி, கிண்டல் போன்ற வேற்றுமைகளிலிருந்து பாதுகாக்க பல்கலைக் கழக மானியக்குழு யூஜிசி ஜனவரி 13ஆம் தேதி அறிவித்த "உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான விதிமுறைகள் 2026"ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க விதிமுறை என அவர் கூறினார். ரோஹித் வெமுலா,பயல் தளத்வி போன்ற மாணவர்களின் மரணங்களுக்குப் பிறகு,உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இந்த விதிகள் கொண்டு வரப்பட்டதாகவும்,இது முழுக்க முழுக்க ஒபிசி எஸ்இ எஸ்டி, மாணவர்களின் பாதுகாப்புக்கானது என்றும் விளக்கினார்.ஆனால், இந்த விதிகள் குறித்து தமிழக அரசியல் கட்சிகளோ, சமூக அமைப்புகளோ வரவேற்பு தெரிவிக்கவில்லை என்றும், வட இந்தியாவில் எதிர்ப்பு எழுந்தபோதும் தமிழகத்தில் அமைதி நிலவியது வேதனை அளிப்பதாக தெரிவித்தார். மேலும் 42 ஆண்டுகளாக ஓபிசி இடஒதுக்கீட்டில் உள்ள குறைபாடுகள்,மத்திய அரசு பணிகளில் பதவி உயர்வு மறுப்பு,ஐஐடி, ஐஐஎம், ஐஐஎஸ்இ போன்ற நிறுவனங்களில் நடக்கும் அநீதிகள் குறித்து அரசியல் கட்சிகள் எந்த உறுதியான போராட்டமும் நடத்தவில்லை என்றும் சாடினார். "சமூக நீதி" என்ற பெயரில் ஓட்டு வங்கி அரசியல் மட்டுமே நடக்கிறது என்று கூறிய ரத்ன சபாபதி,பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்த அரசியல்வாதிகளின் உண்மையான முகத்தை உணர வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கன்னியாகுமரி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வணிகவியல் மன்ற தொடக்க விழா



நாகர்கோவில், பிப். 03-

கன்னியாகுமரி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வணிகவியல் மன்ற தொடக்க விழாவுக்கு கல்லூரி வணிகவியல் துறை தலைவர் டாக்டர் டி ஆண்ட்ரூஸ் ஸ்கார்ட் தலைமை தாங்கினார் மாணவி பிரவிஷா வரவேற்று பேசினார் சிறப்பு விருந்தினராக அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரி வணிகவியல் துறை தலைவர் டாக்டர் ஆர் தர்ம ரஜினி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றி வணிகவியல் மன்றத்தை தொடங்கி வைத்து சிறந்த மாணவிகளுக்கு பாராட்டு மற்றும்பரிசுகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர் முடிவில் மாணவி ஜெரூஷா நன்றி கூறினார் ஏற்பாடுகளை வணிகவியல் மன்ற பொறுப்பாளர் முனைவர் இளங்கோ தலைமையில் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.



திருவள்ளூர் வட்டம், இராஜாஜி சாலையிலுள்ள நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் தனியார் கார் நிறுவன சமூக பங்களிப்பு நிதி (சிஎஸ்ஆர்) திட்டத்தின் கீழ் 150 மேசை மற்றும் இருக்கைகள் தொகுப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், வழங்கினார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சொ.கற்பகம், தனியார் கார் நிறுவன துணை பொது மேலாளர் (சிஎஸ்ஆர்) ஹுமின் ஓ. திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தாமோதரன். திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.பாலாஜி, பள்ளி தலைமையாசிரியர் திரு.முரளிதர், ஆசிரியர்கள் மற்றும்திரளான மாணவ மாணவியர்கள் உள்ளனர்.

# நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நாகர்கோவில், பிப்.3-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி, கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 298 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கோதை, ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்ணான்டோ, உதவி ஆட்சியர் (பயிற்சி) ராகுல் குமார், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுகிதா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.காளீஸ்வரி, துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்




வேலூரில் கடந்த 13 ஆண்டு காலமாக வேலூர் மாவட்டத்திலும் மற்றும் பல மாவட்டங்களிலும் வில்வித்தை பயிற்சி அளித்து வரும் இந்துஸ்தான் ஆர்சரி அகாடமி சார்பாக இந்துஸ்தான் ஆர்சரி சேம்பியன்ஷிப் 2026 வில்வித்தை போட்டி தேசிய வில்வித்தை பயிற்சியாளரும் இந்துஸ்தான் ஆர்சரி அகாடமி நிறுவனர் கராத்தே ரமேஷ் கண்ணா அவர்கள் தலைமையில் வேலூர் தி தக்ஷிலா குளோபல் பள்ளியில் நடைபெற்றது வில்வித்தை போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு விஐடி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் வினோ அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஏ.ஈ கார்த்திகேயன் அவர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு பதக்கங்களை வழங்கினர் போட்டியில் உதவி பயிற்சியாளர்கள் பெற்றோர்கள் என்று 300 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு போட்டியை சிறப்பித்தனர்.

# பாலக்கோடு சடட்டமன்ற தொகுதியில் திமுக அரசின் அவலங்களை வீடு வீடாக சென்று எடுத்துரைத்த அதிமுகவினர்



தருமபுரி, பிப்ரவரி. 03-

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் திமுக ஆட்சியில், கடந்த ஐந்து ஆண்டுகளாக மக்கள் படும் இன்னல்களை வீடுதோறும் கொண்டு சேர்க்கும் பொருட்டு மாவட்டக் கழகமும் கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவும் இணைந்து திமுக ஆட்சிக்கு எதிராக, "விடியா ஆட்சி உங்கள் வீட்டு பில்லே சாட்சி" என்ற தலைப்பில், AIADMK Connect செயலியை பயன்படுத்தி, கையடக்க பிரிண்டர்கள் மூலமாக அதிமுக ஆட்சிக் காலத்தையும் தற்போது நடைபெற்று வரும் விடியா திமுக ஆட்சிக் காலத்தையும் ஒப்பிட்டு, கடந்த ஐந்தாண்டுகளில் விலைவாசி ஏற்றத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் மற்றும் கூடுதல் சுமைகளால், ஒவ்வொரு வீட்டிற்கும் இந்த திமுக ஆட்சி கொடுத்திருக்கும் விலைவாசியினை இல்லத்தரசிகள் மற்றும் குடும்பத்தினரின் பார்வைக்கு அச்சிடப்பட்ட பேப்பராக, துல்லியமாக எடுத்துக் கொடுத்து அவர்களிடத்தில் விழிப்புணர்வு பிரச்சாரத்தை காரிமங்கலம் பேரூராட்சியில் அமைப்பு செயலாளர் முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே.பி.அன்பழகன் எம்எல்ஏ தொடங்கி வைத்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அதனையடுத்து மாலை மற்றும் இரவு நேரத்தில் அமைப்பு செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் எம்எல்ஏ அறிவுறுத்தலின் பேரில் பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் பாலக்கோடு, மாரண்டஅள்ளி பேரூராட்சி பகுதியில் அமைப்பு செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் எம்எல்ஏ மகனும் மருத்துவராகிய சந்திர மோகன் மற்றும் ஐடி விங் மாவட்ட செயலாளர் கோவிந்தசாமி,ஐடி விங் மண்டல இணை செயலாளர் பிரசாத், ஐடி விங் மண்டல துணைத் தலைவர் சாந்தகுமார் உள்ளிட்டோர் எடப்பாடியார் அளித்த தேர்தல் வாக்குறுதிகளை பொதுமக்களுடன் எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர் ரங்கநாதன், ஒன்றிய செயலாளர்கள் கோபால், செந்தில், நகர செயலாளர் ராஜா, பேரூராட்சி நகரச் செயலாளர் கோவிந்தன், முன்னாள் கவுன்சிலர் பஞ்சப்பள்ளி சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், ஐடி விங் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் தனியார் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணிணிகள் - கலெக்டர் வழங்கினார்!



நாகர்கோவில், பிப்.3-

கன்னியாகுமரி மாவட்டம், அஞ்சுகிராமம் ரோகிணி பொறியியல் கல்லூரியில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ் தனியார் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமை வகித்தார். நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ் முன்னிலை வகித்தார்.

கலெக்டர் தெரிவிக்கையில்:-

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 12 அரசு கல்லூரிகள் மற்றும் 17 அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் 2,182 மாணவர்களுக்கு முதற்கட்டமாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்தொடர்ச்சியாக 15 அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் 4524 மாணவ மாணவியர்களுக்கும், 9 தனியார் கல்லூரிகளில் பயிலும் 586 மாணவ, மாணவியர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் ஒருபகுதியாக ரோகிணி பொறியியல் கல்லூரி 364, ரோகினி பாலிடெக்னிக் கல்லூரி 117, விவேகானந்தா பாலிடெக்னிக் கல்லூரி 98, குமாரசாமி ஹெல்த் சென்டர் காலேஜ் ஆப் நர்சிங் 42, குமாரசாமி ஹெல்த் சென்டர் ஸ்கூல் ஆப் நர்சிங் 16, லார்ட் ஜெகன்நாத் காலேஜ் ஆப் எஞ்சினியரிங் 52 என மொத்தம் 6 தனியார் கல்லூரிகளில் பயிலும் 689 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது. என கூறினார். நடைபெற்ற நிகழ்ச்சியில் ரோகிணி பொறியியல் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் , பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் .அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்.**

# உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஓரியானா பவர் நிறுவனத்துடன் தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



தூத்துக்குடி, பிப்.03-

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஓரியானா பவர் லிமிடெட்டுடன், நிலைத்த எரிசக்தி முன்னெடுப்புகளில் ஒத்துழைப்பு செய்யும் நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

ஜன. 27 முதல் 30 வரை கோவாவில் நடைபெற்ற இந்தியா எரிசக்தி வாரம்-2026 நிகழ்வில் இந்த ஒப்பந்தம் கையொப்பமானது. வ.உ.சி. துறைமுக ஆணையத் தலைவர் சுசாந்தகுமார் புரோஹித் முன்னிலையில், நிர்வாகப் பொறியாளர் எ. செந்தில் கணேஷ், ஓரியானா பவர் லிமிடெட் சார்பாக வர்த்தகத் தலைவர் ஓம்கார் நாத், இணை நிறுவனர் அனிருத் சரஸ்வத் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.இந்த ஒப்பந்தம் கார்பன் பிடிப்பு, பயன்பாடு, சேமிப்பு முன்னோடித் திட்டம் அமைத்தல், துறைமுகம் அல்லது துறைமுகம் தொடர்புடைய இடங்களில் பசுமை மெத்தனால் உற்பத்தி நிலையம், அதனுடன் தொடர்புடைய கட்டமைப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்த முன்முயற்சி துறைமுகத்தின் கார்பன் நடுநிலைமை இலக்குகளை முன்னெடுக்கவும், பசுமை மெத்தனால் சேமிப்பு, வர்த்தக ஏற்றுமதிக்கான பசுமை ஹைட்ரஜன் கட்டமைப்புக்கான தயாரிப்பில் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.மேலும், வ.உ.சி. துறைமுக ஆணையம், தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் யுனிவர்சல் கிளீன் டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. துறைமுகத்தில் திடக்கழிவு செயலாக்க நிலையத்தை உருவாக்குவது இதன் நோக்கமாகும். இதில், துறைமுக ஆணையத் தலைவர் முன்னிலையில், நிர்வாக பொறியாளர், யுனிவர்சல் கிளீன் டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் பொது நிர்வாகி பினு மோகன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் சி. ப்ரியங்கா ஆகியோர் கையொப்பமிட்டனர்.

# தென்காசி பொதிகை புத்தக திருவிழாவில் எழுத்தாளர்களுக்கு பரிசு - கலெக்டர் வழங்கினார்




தென்காசி, பிப்.03-

தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற 3- வது நாள் புத்தகத் திருவிழாவில் கலந்து கொண்ட எழுத்தாளர்கள் / பேச்சாளர்கள் / கலைஞர்கள் ஆகியோருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் நினைவுப்பரிசு வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்

புத்தகத்திருவிழா மூன்றாவது நாள் நிகழ்ச்சியாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள், வாசுதேவநல்லூர் கலைக்குழுவினரின் சிலம்பம் மற்றும் புலியாட்டம், எழுத்தாளர் ராஜகோபாலன் அவர்களின் வாசிப்பும் வாழ்க்கையும் என்ற சிறப்புரை, எழுத்தாளர் அகிலாண்ட பாரதி மனங்களின் நடுவே என்ற சிறப்புரை, கலைமாமணி / இலக்கிய மாமணி விருதாளர் கவிஞர் கலாப்ரியா கவிதைகள் காட்டும் காட்சிகள் சிறப்புரை, ஆறுமுகம் கலைக்குழுவினரின் மனிதன் மகிழ்ச்சியாக வாழ்ந்தது அந்தக் காலமே? இந்தக்காலமே? என்ற தலைப்பில் பட்டிமன்றம், மதுக்கூர் இராமலிங்கம் குழுவினரின் சமூக மாற்றத்திற்கு பெரிதும் துணை புரிவது பேச்சா? எழுத்தா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது என மாவட்ட ஆட்சித்தலைவர் கமல் கிஷோர் தெரிவித்தார்.

மேலும் எழுத்தாளர் அகிலாண்ட பாரதி எழுதிய "பாண்டியர் இருவர்" என்ற தலைப்பில் நாவல் மற்றும் " ஊருக்குள் வந்த ஒட்டகம்" என்ற தலைப்பில் சிறார் வாசிப்பு நூலினை கவிஞர் கலாப்ரியா வெளியிட மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட சமூகநல அலுவலர் மதிவதனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# திண்டுக்கல்லில் 2026, அறிவியல் தொழில்நுட்ப புத்தாக்கத் திருவிழா



திண்டுக்கல், பிப்.03-

திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் எஸ் எஸ் நாகராஜ் நினைவு அறக்கட்டளை இணைந்து நடத்தும் மாநில அளவிலான அறிவியல் தொழில்நுட்ப புத்தாக்க திருவிழா 2026 - எம்எஸ்பி பள்ளி வளாகத்தில் ஜனவரி - 28 முதல் பிப்ரவரி, 03 2026 வரை நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த கண்காட்சியை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் அவர்கள் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டில் முதன்முறையாக மாநில அளவிலான தொழில்நுட்பக் கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாணவர் விழிப்புணர்வு பெறுவதற்காக இதில் ரோபோட், ராக்கெட், மயில், விண்வெளி வீரர் பூமிக்கு வருவது போன்ற காட்சிகள் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் 120 ஸ்டால்கள் , 240 படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரைஎழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இதுவரை பங்கேற்றுள்ளனர், இதை ஒரு திருவிழா என்றே அழைக்கலாம். இந்த கண்காட்சியில் மதுரை தியாகராசர் கல்லூரியும் கலந்து கொண்டு உடல்நலத்தைப் பேணிக் காப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் Microgreens (நுண் கீரைகள்) தொடர்பான ஒரு கண்காட்சியை அமைத்திருந்தனர். இதில் டாக்டர். விஜி தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் மற்றும் தாவரவியல் துறை மாணவர்கள், நுண்கீரைகளின் பயன்பாடு மற்றும் ஊட்டச்சத்து மதிப்புகள் குறித்து பார்வையாளர்களுக்கு விளக்கமளித்தனர். மேலும் TCABIOHUB என்ற தொடக்க நிறுவனம் மூலமாக கல்லூரியில் நுண்கீரைகள் விற்பனையும் செய்கிறார்கள். இதற்கு மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கின்றது.

# வண்டிக்காரன் கொட்டாய் கிராமத்தில் தைப்பூச திருவிழா



ஊத்தங்கரை, பிப்.3-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த, வண்டிக்காரன்கொட்டாய் கிராமத்தில் உள்ள முருகன் கோயிலில் தைப்பூச திருவிழா ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அதிகாலை முதலே பால்குடம் எடுத்து முருகன், வள்ளி, தெய்வானை சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டனர். அதனைத் தொடர்ந்து முருகன் காவடி எடுத்து ஊர்வலமாக சென்று, பம்பை மேளதாளத்துடன் தீபாராதனை நடந்தது.பறவை காவடி மூலம் சென்று நேர்த்திகடன் செலுத்தினர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் ஊர் நாட்டாமை தண்டபாணி, ஊர் கவுண்டர் தவமணி, முருகேசன், சுப்பிரமணி, துரை, சண்முகம்,சம்பத்,சிவா, அன்பு மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர். பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# இளம்விழுதுகள் அறக்கட்டளை சார்பில் தேங்காப்பட்டணம் கடற்கரை பகுதியில் தூய்மை பணி



புதுக்கடை, பிப்.3-

இளம் விழுதுகள் அறக்கட்டளை சார்பாக தேங்காய்பட்டணம் துறைமுக கடலோர பகுதியில் தூய்மை பணி நேற்று மாலையில் நடந்தது. இந்த தூய்மை பணி நிகழ்வில் மீன் வளத்துறை மற்றும் மீனவர் நலத்துறை சார் ஆய்வாளர் லிபின் மேரி தலைமை வகித்தார். ஊரக வளர்சித்துறை உதவி பொறியாளர் ரெஜன், பரவை சாரிட்டபின் டிரஸ்ட் கணக்கர் ஐசக், கடலோர காவல் குழும ஆய்வாளர் ரா. ததேயு குமார், பைங்குளம் ஊராட்சி முன்னாள் தலைவர் விஜயராணி, தக்கலை அரசுப்பள்ளி மாணவர் அடிட்டிக் ஷில், இளம் விழுதுகள் அறக்கட்டளை நிறுவனர் இராஜகோபால் , செயலாளர் ஹான்ஸ்டன் ஜிக்சிங், பொருளாளர் ஷாஜன் மற்றும் தன்னார்வலர்களும், மாணவர்களும் திரளாக கலந்துகொண்டு தூய்மை பணி செய்தனர். நிகழ்சியில் கலந்துகொண்டவர்களுக்கு பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது.

# குறளகம் ஆண்டு விழா: அகில இந்திய தமிழர் கழகம் நிறுவனர் முத்துகுமார் மாணவர்களுக்கு பரிசு வழங்கினார்




நாகர்கோவில், பிப். 3-

நாகர்கோவிலில் வைத்து கவிஞர் தமிழ்க்குழவியாரின் குறளகம் அமைப்பின் 16-வது ஆண்டு விழா, ஐம்பெரும் விழாவாக காலை தொடங்கி மாலை 7 மணி வரையிலும் நடைபெற்றது.

நடைபெற்ற தொடர் நிகழ்வில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 600- க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவ -மாணவியர்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர்.

மாணவ- மாணவியர்களுக்கு கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, மாறுவேடப்போட்டி மற்றும் புத்தக வெளியீடு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந் நிகழ்ச்சியில் எழுத்தாளர் பொன்னீலன், வழக்கறிஞர் இரத்தினசாமி, தமிழறிஞர்கள் பார்த்தசாரதி, இரத்தினசாமி, புலவர் சிவதாணு, மருத்துவர் இராஜேஸ்கோபால், இனியன்தம்பி, முத்துக்கருப்பன், முனைவர் மலர், குமரி ஆதவன், கடிகை ஆன்றனி, சுந்தரலிங்கம், பொன்னுலிங்கம், எழுத்தாளர் தாகூர் உட்பட பலர் கலந்து கொண்டனர். அகில இந்திய தமிழர் கழகத்தின் சார்பில் அதன் நிறுவனர் முத்துக்குமார் கலந்துக் கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ- மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

# ஈரோடு நந்தா கலை அறிவியல் கல்லூரியில் சர்வதேச கருத்தரங்கம்




ஈரோடு, பிப். 3-

ஈரோடு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சர்வதேச அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகம் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் சண்முகன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பெங்களூரில் செயல்பட்டு வரும் பி.எம்.எஸ். தொழில் நுட்பக் கல்லூரியின் மேலாண்மை துறை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உதவி பேராசிரியர் ராஜேந்திரா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இளங்கலை வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறையின் தலைவர் குமார் வரவேற்றார் .மேலும், இவ்விழாவில் பெங்களூரு கிரிஸ்ட் நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் உமாசங்கர், அமெரிக்காவின் சவுண்ட் ஹவுண்ட் ஏஐ ருீன் உதவி இயக்குநர் நோபல் குப்புசாமி நியூயார்க் யு.பி.எஸ் பினான்சியல் சர்வீஸின் உதவி இயக்குநர் ராஜேஸ்வரி தேசிங்கராஜன் பெருந்துறை ஈங்கூர் ஹிந்துஸ்தான் கலை மற்றும் வணிகவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ராமன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக கலந்துகொண்டு இன்றைய காலகட்டத்தில் செயற்கை நுண்ணறிவு வணிகவியல் துறையில் எவ்வாறு பயன்படுகிறது என்பதை காணெலி காட்சி மூலம் மாணவர்களுக்கு விளக்கம் அளித்தார்கள்.

இந்நிகழ்வில் 40க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து 550க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். அதில் 70க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளின் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தார்கள் . நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின்; முதல்வர் முனைவர் மனோகரன், நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் திருமூர்த்தி, மற்றும் நிர்வாக அதிகாரி முனைவர். சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர் . முதுகலை வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறையின் தலைவர் வீரக்குமார் முடிவில் நன்றி கூறினார்.

# கே.ஜி.ஐ.எஸ்.எல் கல்வி குழுமத்தின் சார்பாக கல்வி விருது வழங்கும் விழா



கோவை, பிப்.03-

கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள கே.ஜி.ஐ.எஸ்.எல் கல்வி குழுமத்தின் சார்பாக ஆண்டுதோறும் கல்வி விருது வழங்கும் விழா கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. இதில் ஒவ்வொரு ஆண்டும் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள், பள்ளியின் தலைமை ஆசிரியர்கள், மற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கு சாதனையாளர் விருது வழங்கி கௌரவப்படுத்தப்பட்டு வருகின்றது.

அவ்வகையில் 2026 ஆம் ஆண்டுக்கான கே.ஜி.ஐ.எஸ்.எல் கல்வி விருதுகள் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கேஜி குழுமத்தின் தாளாளர் பத்மஸ்ரீ டாக்டர் பக்தவச்சலம் வாழ்த்துரை வழங்கினார். கேஜி கல்வி குழுமத்தின் நிர்வாக அரங்காவலர் முனைவர் அசோக் பக்தவச்சலம் தலைமை உரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உயர் இலக்குகளை வகுத்து, வெற்றி பெறுவதற்கான யுத்திகளை எடுத்து கூறினார். தொடர்ந்து கோவை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில், உள்ள மேல்நிலை, மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில், பணியாற்றி வரும் முதல்வர்கள், சிறந்த ஆசிரியர்கள், நல் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு விருதுகளும், பரிசுகளும் வழங்கி பெருமைப்படுத்தப்பட்டது. மேலும் ஆசிரியர் பணியே அறப்பணி என்று திறம்பட பணியாற்றிய 26 சிறந்த ஆசிரியர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இவ்விழாவின் வாயிலாக 156 பள்ளிகளின் முதல்வர்களுக்கும், 1430 ஆசிரியர்களுக்கும், 1983 மாணவர்களுக்கும், விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டது.

இதில் 183க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து, 4000த்திற்க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள், என பலரும் கலந்து கொண்டு விருதுகளை பெற்றனர். இந்த நிகழ்ச்சியில், கோவை மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி பாலமுரளி, கோவை மாவட்ட தனியார் பள்ளிகளின் மாவட்ட கல்வி அலுவலர் நந்தகுமார், கே.ஜி கல்வி குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அரவிந்த் குமார் ராஜேந்திரன், செயலர் வனிதா, கல்லூரியின் முதல்வர் வித்யா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.